**செய்தி வெளியீடு எண்:252** **நாள்:09.06.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு கைத்தறி, துணி நூல் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியத் துறை அமைச்சர் திரு.ஆர். காந்தி அவர்களின் தலைமையில் 09-06-2021 அன்று கதர் கிராமத் தொழில் வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் வாரியத்தின் அமைப்பு, அலுவலக செயல்பாடுகள், வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கதர் மற்றும் கிராமத் தொழில் அலகுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. உற்பத்திப் பொருட்களின் தரத்தினை உயர்த்தவும், விற்பனையினை அதிகப்படுத்தவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., அரசு முதன்மை செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை அவர்களும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி கி. சாந்தி, இ.ஆ.ப., அவர்களும் மற்றும் வாரியத்தின் உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**